1984 மார்ச் 7] [பேரவைத் துணைத் தலைவர்]

இப்பேரவை கவலை தெரிவிக்கிறது. தமிழ்நாட்டில் கடந்த இருபது ஆண்டு காலமாக, மின் உற்பத்தியைக் குறித்து திட்ட மிடுகையில், இவ்விரு மின் நிலையங்களின் உற்பத்தி முழுவதையும் தமிழ்நாட்டிற்கே கிடைக்கும் என்ற எண்ணத்தை மைய அரசு பல்வேறு கால கட்டங்களில் ஊக்குவித்ததன் அடிப்படையில் திட்டமிட்டுள்ளது. எனவே, நெய்வேலி இரண்டாவது அனல் மின் நிலையத்திலிருந்தும், சென்னை அணு மின் நிலையத்திலிருந் தும் உற்பத்தியாகிற மின்சாரம் முழுவதையும் தமிழ்நாட்டிற்கே ஒதுக்குமாறு மைய அரசைக் கேட்டுக் கொள்வதென இப்பேரவை தீர்மானிக்கிறது''

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

3. தகவல் கோரல். (தொடர்ச்சி)

(ஆ) இராமநாதபுரம் மாவட்டத்தில் வெள்ளத்தினால் ஏற்பட்டுள்ள வெள்ளச் சேதம்.

திரு. வ. சத்தியமூர்த்தி : பாயிண்ட் ஆப் ஆர்டர் சார், மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றும் இன்றும் தொடர்ந்து மழை பெய்து ராமநாதபுரம் மாவட்டத்தில் பல நகரங்களும் கிராமங்களும் துண்டிக்கப் பட்டுள்ளன. சாலைகளில் போக்குவரத்து அறவே நிறுத்தி வைக்கப்பட்டு விட்டது. தரைப்போக்குவரத்து இல்லை. அங்கே மக்களுக்கு உணவுக்கு வழி இல்லாத வகையிலும், அவர்களுடைய உடமைகளை இழந்து அந்த மக்கள் பெரும் அவதிக்கு உள்ளாகி இருக்கிறார்கள் என்று தந்தி மூலமும் தொலைபேசி மூலமும் தகவல் கள் தொடர்ந்து வருகின்றன. தரை மார்க்கமாக உணவு வழங்க வேண்டிய நிலை இருக்கிறது. அது தொடர்பாக அரசுக்கு தகவல் ஏதும் வந்திருக்கிறதா? அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க ஆணை பிறப்பித்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தக் கோரிக்கையை எப்போதும் சட்டமன்றம் துவங்கும் போது எடுத்து வைப்பது உண்டு. சட்டமன்றப் பேரவை முடியும்போது தகவல் வைப்பது உண்டா ? இந்தத் தகவலை எப்படித் தரமுடியும்? ஏற்கனவே அது பற்றிய விளக்கங்கள் தரப்பட்டிருக்கின்றன. ஆகவே சட்டமன்ற உறுப்பினர்கள் கூறியதற்குப் பிறகு தான் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன என்பது அல்ல. ஆங்காங்கே வறட்சியினால் பாதிக்கப்பட்டபோதும், வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட போதும், மாவட்ட ஆட்சித்தலைவர்கள் அன்றாடம் ஆங்காங்கே மக்களிடத்திலே சென்று, அவர்களுடைய குறைபாடுகளையும் மற்றவைகளையும் போக்குவதற்கான நடவடிக்கைகளை எடுக்க

வேண்டுமென்று அரசால் அறிவுறுத்தப்பட்டிருக்கிறார்கள். அவ்வப்போது ஏற்படுகிற சூழ்நிலைக்கேற்ப நடவடிக்கைகள் எடுத்து வருகிறார்கள். அவ்வப்போது ஏற்படும் சூழ்நிலையை அவையில் எடுத்து வைப்பதற்கு வாய்ப்பிருக்கிறது. பொது விவாதம், மானியக் கோரிக்கை வரும்போது இன்னும் தெளிவு படுத்த வாய்ப்பிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் மட்டுமல்ல, பல்வேறு தொகுதிகளைச் சார்ந்த உறுப்பினர்களும் அவர்களுடைய எண்ணங்களை தெரிவித்து வருகிறார்கள். அவர்கள் எண்ணத்திற்கு உரிய மதிப்பு அளித்து, இவைகளைக் கருத்தில் கொண்டு, அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது. என்பதை இந்த வாய்ப்பினில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று 8—3—1984 காலை 9-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-58 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

110. அம்பத்தூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—10—1982 ஆம் நாளிட்ட 975 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.[தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

111. பெரம்பூர் கிராமத்தின், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி-நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 7—7—1983 ஆம் நாளிட்ட 1030 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1971 ஆம் ஆண்டு நகர-நாட்டுப்புற திட்டச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 35/1972) 123 (2) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

112. சின்ன சேக்காடு கிராமத்தின் சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கான பெருந்திட்டத்தில் மாற்றம் செய்வது குறித்து வீட்டு வசதி—நகர்ப்புற வளர்ச்சித் துறையின் 23—7—1983 ஆம் நாளிட்ட 1145 ஆம் எண் அரசாணையில் வெளிடப்பட்ட